# தாவரவியல் கலைச்சொல் அகராதி

| | |
|---|---|
| அசிட்டைல் கோ என்சைம் A (Acetyl CoA) | அசிட்டைல் தொகுதி கொண்ட இணை நொதியுடன் இணைந்த சிறிய, நீரில் கரையக்கூடிய வளர்சிதை மாற்றப் பொருள் |
| வினைத்திறன் மையம் (Active site) | நொதியின் பகுதி, தளப்பொருள் இணைந்து வினை ஊக்குவிக்கப்படும் |
| உறக்க நகராவித்து (Akinetes) | தடித்த சுவருடைய, ஓய்வு நிலையிலுள்ள, நகரும் தன்மையற்ற பாலிலா வித்துகள் |
| அல்யுரோன் (Aleurone) | கருசூழ் திசுவின் புற அடுக்கு |
| பாலிலா நிலை (Anamorph) | பூஞ்சைகளில் பாலிலா அல்லது முழுமையற்ற நிலை |
| சமமற்ற கேமீட்களின் இணைவு (Anisogamy) | புற அமைப்பு அல்லது செயலியலில் வேறுபட்ட கேமீட்களின் இணைவு |
| பாலிணைவின்மை (Apogamy) | கேமீட்களின் இணைவின்றி கேமீட்டகத் தாவர உடல திசுக்களிலிருந்து வித்தகத்தாவரம் தோன்றுதல் |
| குன்றலில்லா வித்துத்தன்மை (Apospory) | வித்துகளைத் தோற்றுவிக்காத வித்தக தாவரத்திலிருந்து கேமீட்டகத் தாவரங்கள் தோன்றுதல் |
| பலாஸ்டா (Balausta) | சதைப்பற்றுள்ள வெடியாக்கனி |
| அடிப்பகுதி (Basal body) | இது சீலியா மற்றும் கசையிழையின் அடிப்பகுதி. இங்கு நுண் இழைகள் ஆக்சோனிமை தோற்றுவிக்கின்றன. |
| உயிர்க்கோளம் (Biosphere) | உயிரினங்கள் வாழக்கூடிய புவியின் பகுதி |
| தாங்கல் கரைசல் (Buffer) | இது அமில கார சேர்மமாகும். இதில் மிக குறைந்த அளவில் வலிமையான அமிலத்தையோ அல்லது காரத்தையோ சேர்க்கும் போது இதன் pHல் சிறிதளவு மாற்றம் ஏற்படும் |
| கார்சினோஜென் (Carcinogen) | இது ஒரு வேதிய அல்லது இயற்பியல் காரணி. செல் அல்லது உயிரியின் மீது இவை படும் போது புற்றுநோய் ஏற்படுத்துகிறது |
| வேதிமுறை வகைப்பாடு (Chemotaxonomy) | உயிர்வேதியியல் கூறுகளின் அடிப்படையில் தாவரங்களை வகைப்படுத்தும் ஓர் வகைப்பாட்டு முறையாகும் |
| கிளைகள் (Clades) | பரிணாம வரைபடத்தில் ஒத்த பண்புகளைக் கொண்ட சிற்றினங்களின் தொகுப்பைக் காட்டும் கிளை |
| கால்வழி கிளைத்தல் (Cladistics) | பொதுவான மூதாதையரிடமிருந்து பெறப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகிரப்பட்ட, தனித்துவமான பண்புகளை அடிப்படையாகக் கொண்ட குழும முறை |
| கோடான் (Codon) | புரத உற்பத்தியின் போது ஓர் அமினோ அமிலத்தை குறிக்கும் DNA அல்லது RNA வில் உள்ள முன்று நியூக்ளியோடைடுகளின் வரிசை முக்குறியீட்டுச் சொற்கோவை என்று அழைக்கப்படுகிறது |
| பல்லுட்கரு நிலை (Coenocytic condition) | தடுப்புச் சுவரற்ற, பல உட்கருக்கள் கொண்ட நிலை |
| டால்டன் (Dalton) | இது ஹைட்ரஜன் அணுவின் நிறை (1.66 x$10^{-24}$g) க்கு ஏறக்குறைய சமமான முலக்கூறு நிறையுடைய அலகு ஆகும் |
| கருவூண்திசு (Endosperm) | வளரும் கருவிற்கு ஊட்டமளிக்கும் திசு |
| அகவித்து (Endospore) | தடித்த உறையுடைய ஓய்வு நிலை வித்து |
| உண்மை வித்தகத் தன்மை (Eusporangiate) | பல தோற்றுவிகளிலிருந்து வித்தகம் தோன்றுதல் |
| தொல்லுயிர் எச்சம் (Fossil) | புவியியல் காலத்தில் வாழ்ந்து மடிந்த தாவர மற்றும் விலங்குகளின் எச்சங்கள் அல்லது படிமங்கள் |
| கேமீட்டகத் தாவரம் (Gametophyte) | ஒற்றை மடிய (n) தாவர உடலம். |
| மரபணு தொகையம் (Genome) | ஓர் உயிரினத்தின் ஒட்டுமொத்த ஜீன்களின் தொகுப்பு |
| இளங்கரு முளை (Germ) | புரதம் மிக்க இளங்கரு |
| மாற்றுவித்துத்தன்மை (Heterospory) | வேறுபட்ட அளவுடைய வித்துகளை தோற்றுவித்தல் (பெருவித்து மற்றும் நுண்வித்து) |
| உட்கரு இணைவு (Karyogamy) | உட்கருக்களின் இணைவு |
| கேரியோடைப் (Karyotype) | யூகேரியாட்டிக் செல்களில் உள்ள மெட்டாபேஸ் குரோமோசோமின் மொத்த தொகுப்பின் எண்ணிக்கை, அளவு மற்றும் வடிவம் |
| Km (Km) | ஒரு நொதி அதன் தளப்பொருளோடு கொண்ட நாட்டத்தின் அளவீடாகும். இது அதிகபட்ச அரை வினை வேகத்தை பெறக்கூடிய தளப்பொருளின் செறிவிற்கு சமமானது |
| மெலிவித்தகத் தன்மை (Leptosporangiate) | ஒற்றை தோற்றுவியிலிருந்து வித்தகம் தோன்றுதல் |
| எண்ணிக்கை அமைவு (Merosity) | ஓர் வட்ட அடுக்கில் அமைந்துள்ள மலர் உறுப்புகளின் எண்ணிக்கை ஆகும் |
| துளிர் தாவரங்கள் (Microgreens) | கீரை விதைத் துளிர் தாவரங்கள் – உணவுத் தயாரிப்பில் பயன்படுத்தப்படுபவை |
| தனிக்கட்டுரை (அ) தனிவரைவு நூல் (Monograph) | ஒரு குறிப்பிட்ட குடும்பம், பேரினம், சிற்றினம் போன்ற வரிசையுடைய தாவர குழுவின் மொத்த விளக்கத்தைத் தாங்கிய நூலாகும் |
| ஒற்றைக்குழியுடைய மகரந்தத்துகள் (Monosulcate) | மகரந்தத்துகள் மீது காணப்படும் ஒற்றைத்துளை அல்லது ஒற்றைக்குழியாகும் |
| பூஞ்சை வங்கி (Mycobank) | புதிய பூஞ்சைகளின் விவரம், பெயர் அடங்கிய இணையத்தள தரவு |



11th_BIO-BOTANY_CH 15-TM.indd 319 12/10/2021 10:45:43 AM

| | |
|---|---|
| உட்கரு ஒத்த அமைப்பு (Nucleoid) | பாக்டீரியத்தின் மரபுப்பொருள் |
| முட்டை கருவுறுதல் (Oogamy) | புறஅமைப்பு மற்றும் செயலியலில் வேறுபட்ட கேமீட்களின் இணைவு |
| கருவுறா சூலகக்கனி (Parthenocarpy) | கருவுறுதல் நிகழா கனி உருவாக்கம் |
| தொங்கும் அமைவு (Pendulous) | மலர்கள் தனித்தனியாக அல்லது மஞ்சரியாக தொங்கும் அமைப்பு, தொங்கு மஞ்சரி / தொங்கு சூல் |
| கல்லாதல் (Petrifaction) | இறந்த உடலின் பகுதிகளில் தொடர்ந்து தனிமங்களின் ஊடுருவலால் கல்லாக்கப்பட்டு தொல்லுயிர் எச்சங்கள் தோன்றும் முறை |
| இனப்பரிணாமம் (Phylogeny) | உயிரினத் தொகுப்பின் இனப்பரிணாம வளர்ச்சி ஆகும் |
| பிஸ்டில்லோட் (Pistillode) | இனப்பெருக்கத்தன்மையற்ற சூலகம் |
| சைட்டோபிளாச இணைவு (Plasmogamy) | சைட்டோபிளாசம் இணைவது |
| புளூரிலாக்குலார் (Plurilocular) | இரண்டிற்கு மேற்பட்ட சூலக அறைகளைக் கொண்ட சூலகப்பை |
| ஃபாஜ் முன்னோடி (Prophage) | ஓம்புயிரி DNA உடன் ஒருங்கிணைந்த ஃபாஜ் DNA |
| ப்ரோட்டோலாக் (Protologue) | முதல்முறையாக ஆசிரியரால் பதிப்பிக்கப்பட்ட முழு மூலத் தாவரத்தின் அறிவியல் பெயரோடு வெளியிடப்பட்ட தாவரம் சார்ந்த தகவல்கள் |
| ராச்சில்லா (Rachilla) | ஸ்பைக்லெட்டின் அல்லது சிறுகதிர் மஞ்சரியின் மைய அச்சு |
| வித்தகத்தாவரம் (Sporophyte) | இரட்டைமடிய (2n) தாவர உடலம் |
| பால் நிலை (Telomorph) | பூஞ்சைகளில் பால் நிலை அல்லது முழுமையான நிலை |
| உடல வித்துகள் (Thallospores) | ஹைஃபாக்கள் துண்டாதல் மூலம் உண்டாக்கப்படும் பாலிலா வித்துகள் |
| முக்குழியுடைய மகரந்தம் (Tricolpate) | மகரந்தத் துகள்களின் மீது காணப்படும் முக்குழிகள் அல்லது மூன்று பள்ளங்கள் |
| X–கதிர் படிக வரைகலை (X–Ray Crystallography) | X– கதிர்களை பெருமூலக்கூறுகளில் (குறிப்பாக புரதங்கள் மற்றும் நியூக்ளிக் அமிலங்கள்) ஊடுருவச் செய்து அதன் முப்பரிமாண அமைப்பை காட்டும் தொழில்நுட்பம் |
| இயங்குவித்து (Zoospore) | நகரும் திறனுடைய பாலிலா வித்து |
| உறக்க கருமுட்டை (Zygospore) | தடித்த சுவருடைய இரட்டை மடிய ஓய்வு நிலை வித்து |
| உதிரும் பகுதி (Abscission Zone) | இலைக்காம்பின் அடிப்பகுதியில் குறுக்குவாட்டத்தில் அமைந்த மெல்லிய சுவருடைய செல்களால் ஆன அடுக்கு |
| ஒளி ஈர்ப்பு நிறமலை (Absorption spectrum) | ஒளியின் பல்வேறு அலை நீளங்களையும் நிறமிகளின் ஒளி ஈர்ப்பையும் வரைபடத்தில் பொருத்தி பெறப்படும் வளைவுகள் கொண்ட வரைபடமாகும். |
| ஒளிசெயல்திறன் நிறமாலை (Action spectrum) | ஒளி அலைகளின் செயல்திறனை அளவிட அவற்றின் குவாண்டம் விளைச்சலுடன் ஒப்பிட்டு வரையப்படும் வளைவுகள் கொண்ட வரைபடமாகும். |
| காற்றூடக வளர்ப்பு (Aeroponics) | தாவரங்களை வளர்க்கும் தொழில் நுட்பம். ஊட்டசத்து கரைசல் கொண்ட கலனில் தாவர வேரிகள் காற்றில் தொங்கவிடப்பட்டு ஊட்ட சத்தானது வேர்களின் மீது மோட்டாரின் உதவியால் தெளிக்கப்படுகிறது. |
| அகார் (Agar) | சிவப்பு பாசியிலிருந்து பெறப்படும் கூழ்மம் போன்ற பொருள் |
| அல்லிலோபதி (Allelopathy) | ஓர் தாவரம் உற்பத்தி செய்யும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயிரி வேதிபொருள்கள் பிற தாவரங்களின் முளைத்தல், வளர்ச்சி மற்றும் இனப்பெருக்கத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவது. |
| ஃபுளோயம் சூழ் வாஸ்குலக்கற்றை / மையசைலம் (Amphicribral / Hadrocentric) | சைலத்தை சூழ்ந்து ஃபுளோயம் காணப்படுவது |
| சைலம் சூழ் வாஸ்குலக்கற்றை / மையஃபுளோயம் (Amphivasal vascular bundle / Leptocentric) | ஃபுளோயத்தை சூழ்ந்து சைலம் காணப்படுவது |
| வளர் மாற்றம் / கட்டப்படும் செயல் (Anabolic) | இது செல்லுக்குள் ஆற்றல் பயன்படுத்துகின்ற எளிய மூலக்கூறுகளிலிருந்து சிக்கலான மூலக்கூறுகளை உருவாக்கக்கூடிய நொதிகளால் ஊக்குவிக்கும் வினை. |
| நுனிசெல்கொள்கை (Apical cell theory) | தனி நுனிசெல் முழுதாவரமாக வளர்ச்சி அடைகிறது |
| அச்சுபாரங்கைமா (Axial parenchyma) | பாரங்கைமா செல்கள் நீள்போக்காக அச்சிற்கு இணையாக காணப்படுவது |
| காலோஸ் (Callose) | சல்லடை தட்டுகளில் உள்ள துளைகளில் அடைப்பட்டுள்ள பொருள் |
| கார்பானிக் அமிலம் (Carbonic acid) | கார்பன் டைஆக்ஸைடு நீரில் கரைவதால் உருவாகும் திறன் குறைந்த அமிலக்கரைசல் |
| சிதைவு / மாற்றம் சிதைக்கும் செயல்(Catabolic) | இது செல்லுக்குள் ஆற்றல் பயன்படுத்துகின்ற சிக்கலான மூலக்கூறுகளிலிருந்து எளிய மூலக்கூறுகளை உருவாக்கக்கூடிய நொதிகளால் ஊக்குவிக்கும் வினை. |
| இணைவு காரணிகள் (Chelating agents) | கரிம பிணைப்பு காரணிகளின் சில அணுக்கள் எலக்ட்ரான்களை எதிர்மின் அயனிகளுக்கு வழங்குவதால் உருவாகும், நீரில் கரையக்கூடிய இணைக்கும் பொருட்கள். |
| பச்சையசோகை (Chlorosis) | பச்சையம் சிதைவடைதல் மற்றும் உற்பத்தி பாதிப்பினால் இலைகள் மஞ்சள் நிறமாதல். |
| மூடிய வாஸ்குலக் கற்றைகள் (Closed vascular bundles) | சைலத்திற்கும் ஃபுளோயத்திற்கும் இடையில் கேம்பியம் காணப்படுவது. எடுத்துகாட்டு: ஒரு விதையிலைத் தண்டு |
| இணை நொதி (Coenzyme) | நொதி ஊக்குவிக்கும் வினைகளில் பங்கேற்கும் ஒரு புரதமல்லாத மூலக்கூறு, பல்வேறு மூலக்கூறுகளுக்கு இடையே புரோட்டான்கள் அல்லது எலக்ட்ரான்களை பரிமாற உதவுகிறது. |

| | |
|---|---|
| கூழ்மம் (Colloidal) | இருவேறுபட்ட துகள்கள் தங்களது பண்புகளை இழக்காமல் ஒரு அமைப்பில் சரிவிகிதத்தில் விரவி காணப்படும் நிலை |
| அமினோ நீக்கம் (Deamination) | ஒரு அமினோ அமிலத்திலிருந்து நொதிகளின் மூலம் ஒரு அமினோ தொகுதி அதன் தொடர்புடைய கீட்டோ அமிலத்தை நீக்குவது. |
| நீர் இறுக்கம் தாங்குதல் (Dessiccation tolerance) | தாவரங்கள் நீர் இறுக்கத்தில் தன்னைத்தானே அழித்துக்கொள்ளாமல் எதிர்கொள்ளும் விதம். |
| வறட்சியை எதிர்கொள்ளுதல் (Drought resistance) | நீர் பற்றாக்குறையினால் உண்டாகும் இறுக்கத்தை எதிர்கொள்ளுதல் |
| எத்திலின் டை அமீன் டெட்ரா அசிட்டிக்அமிலம். (EDTA) | எத்திலின் டை அமீன் டெட்ரா அசிட்டிக்அமிலம். காரத்தன்மையுடைய மண்ணில் இரும்பு சத்தினை நீரில் கரையக்கூடிய பொருளாக மாற்றும் இணைவுக்காரணி. |
| ஆற்றல் உள்ளீட்டு வினை (Endergonic) | ஒரு வேதி வினையில் நேர்மறை தனி ஆற்றல் செலவு அல்லது ATP பயன்படுத்தும் வினை. |
| ஆற்றல் வெளியீட்டு வினை (Exergonic) | ஒரு வேதி வினையில் எதிர்மறை தனி ஆற்றல் செலவு அல்லது ATP வெளியிடும் வினை. |
| நார்டிரக்கீடுகள் (Fibre –Trachieds ) | டிரக்கீடு ஒத்த நார்கள் |
| மிளிர் ஒளிர்தல் (Fluorescence) | ஈர்க்கப்பட்ட கதிர்வீச்சு ஆற்றலானது விரைந்து ஒளியாக உமிழும் நிகழ்வு. |
| ஜெலட்டின் (Gelatin) | விலங்குகளிடமிருந்து பெறப்படும் பசைத்தன்மை வாய்ந்த பொருள் |
| கிரானம் (Granum) | பசுங்கணிகத்தின் ஸ்ட்ரோமாவில் லாமெல்லக்கள் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்ட நாணயங்கள் போன்று காணப்படும் அமைப்பு. |
| ஹேட்ரோம் (Hadrome) | ஹேபர்லேண்ட் சைலத்தை ஹேட்ரோம் என பெயரிட்டார் |
| உவர் நிலத் தாவரங்கள் (Halophytes) | உவர் மண்ணில் வாழும் தாவரங்கள் |
| ஒளிநாட்டத் தாவரங்கள் (Heliophytes) | ஒளியை தகவமைத்துக் கொண்டு வாழும் தாவரங்கள். |
| ஹிஸ்டோஜெனிசிஸ் (Histogenesis ) | வேறுபாடடையாத ஆக்கு திசு வேறுபாடுடைய திசுக்களாக மாறுபாடு அடைவது |
| வரம்பற்ற வளர்ச்சி (Indeterminate growth) | வாழ்நாள் முழுதும் வளரும் தாவரங்களின் வளர்ச்சி. |
| மாற்றியமாதல் (Isomerisation) | அணுக்கள் எந்த இழப்பு அல்லது ஆதாயம் இல்லாமல் அதே மூலக்கூறுக்குள் அணு குழுக்களை மறு ஒழுங்கு செய்தல். |
| லெப்டோம் (Leptome) | ஹேபர்லேண்ட் ஃபுளோயத்தை லெப்டோம் என பெயரிட்டார் |
| செல்அறை (Lumen) | டிரக்கீடு, சைலக்குழாய், நார்களில் காணப்படும் செல்அறை |
| மாலேட் ஷட்டில் வழிமுறை(Malate Shuttle mechanism) | கிளைக்காலைசிஸிலிருந்து வெளியேறும் எலக்ட்ரான்களை மைட்டோகாண்ட்ரியாவின் உட்சவ்வு பகுதிக்கு ஆக்ஸிஜனேற்ற பாஸ்பரிகரண நிகழ்ச்சிக்காக இடம்பெயரச் செய்யும் ஒரு உயிர்வேதிய தொகுப்பு ஆகும். |
| பொருண்மை ஆக்குதிசு(Mass meristem) | ஆக்குத்திசு செல்கள் அனைத்து திசைகளிலும் பகுப்படைகிறது. |
| திசு நசிவு (Necrosis) | திசுக்களின் இறப்பு |
| ஹீம் அல்லாத இரும்பு(Non heme iron) | ஹீம் அல்லாத இரும்பு: தாவரங்களிலிருந்து உருவான ஹீம் புரதங்களில் உள்ள இரும்பு கொண்ட போர்பைரின் ப்ராஸ்தெடிக் தொகுதி. |
| சுழலசைவு (Nutation) | பின்னுகொடி மற்றும் பற்றுகம்பிகளின் வளரும் நுனிதண்டில் தானாக நிகழும் அசைவு. |
| திறந்த வாஸ்குலக்கற்றை (Open vascular bundle) | சைலத்திற்கும் ஃபுளோயத்திற்கும் இடையில் கேம்பியம் காணப்படுவது. |
| ஆக்ஸிஜனேற்றம் (Oxidation) | நீரானது ஆக்ஸிஜனேற்றம் அடைந்து ஆக்ஸிஜனாக மாறுதல் (எலக்ட்ரான் இழப்பு ) |
| PAR | ஒளிச்சேர்க்கைக்கு தேவையான ஒளியின் அலை நீளம் (Photosynthetically Active Radiations) 400 முதல் 700 அலை நீளத்தில் ஒளிச்சேர்க்கை வீதம் அதிகமாக உள்ளது |
| நின்றொளிர்தல் (Phosphorescence) | ஈர்க்கப்பட்ட கதிர்வீச்சு ஆற்றலானது தாமதமாக ஒளியாக உமிழும் நிகழ்விற்கு நின்றொளிர்தல் என்று பெயர். |
| ஒளிசார் நீர்பகுப்பு (Photolysis) | ஒளியானது நீரை பிளந்து புரோட்டன்கள். எலக்ட்ரான்கள் மற்றும் ஆக்ஸிஜனாக மாற்றும் வினை. |
| போட்டான் (Photon) | ஒளியானது ஒரு மின்காந்த கதிர்வீச்சு ஆற்றலாகும். மேலும் ஒளியானது மிக நுண்ணிய துகள்களாக பயணிக்கிறது. இதற்கு போட்டான்கள் என்று பெயர். இது ஒளியாற்றலின் தனித்த இயற்பியல் அலகு. |
| ஒளிக்காலத்துவம் (Photoperiodism) | ஒளி மற்றும் இருள் கால (ஒளி காலம்) அளவிற்கு ஏற்ப மலர்தலுக்கான செயலியல் மாறுபாடு ஒளி மற்றும் இருள் கால (ஒளி காலம்) அளவிற்கு ஏற்ப மலர்தலுக்கான செயலியல் மாறுபாடு. |
| ஃபைட்டோகுரோம் (Phytochrome) | குறைந்த செறிவில் ஒளியாக மாறக் கூடிய புரத தாவர நிறமி, சிவப்பு மற்றும் தொலைச் சிவப்பு ஒளியினால் மலர்தலை கட்டுபடுத்தும். |
| குழிதடிப்புகள் (Pitted thickening) | குழியை சுற்றி சீரான தடிப்புகளைகொண்டது |
| ஆயத்த நிலை (Preparatory phase) | முதல் பாதி கிளைக்காலைசிஸ் நிகழ்ச்சியில் ஐந்து நொதிகளின் வினைகளால் ஒரு மூலக்கூறு குளுக்கோஸ் இரண்டு மூலக்கூறு ATP யை பயன்படுத்தி இரண்டு மூலக்கூறு கிளிசரால்டிஹைடு –3– பாஸ்பேடாக உடையக்கூடிய வினை. |
| குவாண்டோசோம் (Quantasome) | ஒளிச்சேர்க்கை செயல்பாட்டிற்கான உருவதோற்ற வெளிப்பாட்டின் அலகுகளாகும். இவை தைலகாய்டு லாமெல்லாக்களின் உட்புறச் சவ்வில் பொதிந்துள்ளன. |



11th_BIO-BOTANY_CH 15-TM.indd 321 12/10/2021 10:45:43 AM

| | |
|---|---|
| குவாண்டம் (Quantum) | ஒவ்வொரு போட்டான்கள் பெற்றிருக்கும் ஆற்றலுக்கு குவாண்டம் (Quantum) என்று பெயர். |
| குவாண்டம் தேவை (Quantum requirement) | ஒளிச்சேர்க்கையின் போது ஒரு ஆக்ஸிஜனை வெளியேற்ற தேவையான போட்டான்கள் அல்லது குவாண்டாக்களின் எண்ணிக்கை |
| குவாண்டம் விளைச்சல் (Quantum yield) | ஒரு குவாண்டம் ஒளி பயன்படுத்தப்படும் போது உருவாகும் ஆக்ஸிஜன் மூலக்கூறுகளின் எண்ணிக்கை |
| உறக்க மையக் கொள்கை (Quiescent centre concept) | வேர்ஆக்குத்திசு பகுதியிலுள்ள தெளிவான செயலூக்கமற்ற பகுதி |
| ஆரப்போக்கமைந்த வாஸ்குலக்கற்றைகள் (Radial vascular bundles) | சைலமும், ஃபுளோயமும் அடுத்தடுத்த வெவ்வேறு ஆரங்களில் அமைந்துள்ளது |
| கதிர் பாரங்கைமா (Ray parenchyma) | ஆரப்போக்காக அமைந்துள்ள பாரங்கைமா |
| ஆக்ஸிஜனேற்ற ஒடுக்க வினைகள் (Redox Reactions) | ஆக்ஸிஜனேற்ற (எலக்ட்ரான் இழப்பு) மற்றும் ஒடுக்க (எலக்ட்ரான் ஏற்பு) வினைகள் |
| ஒடுக்கம் (Reduction) | கார்ப்பன் டை ஆக்ஸைடு ஒடுக்கமடைந்து கார்போ ஹைட்ரேட்டுகளாக மாறுதல் (எலக்ட்ரான் ஏற்பு) |
| தட்டுஆக்குத்திசு (Rib meristem) | ஆக்குதிசு பகுபடும் திசை பரிதிஇணைப்போக்கின் இருவழிவகைகளில் நடைபெறும் |
| ருபிஸ்கோ (Rubisco) | ரிபுலோஸ் பிஸ் பாஸ்பேட் கார்பாக்ஸிலேஸ் மற்றும் ஆக்ஸிஜினேஸ் நொதி, ஒளிச்சேர்க்கையின் போது கார்பன்டை ஆக்ஸைடினை நிலைநிறுத்தம் செய்கிறது. இதுவே இவ்வுலகில் அதிகமாக காணப்படும் புரதம் ஆகும். |
| உவர்ச்சார் இறுக்கம் (Salt Stress) | அதிகப்படியான தாது உப்புகள் தாவரங்களின் வளர்ச்சி மீது ஏற்படுத்தும் அதீத விளைவுகள். |
| சாறு (Sap) | நீர் மற்றும் கரைநிலை கனிமங்கள் கொண்ட திரவம் |
| ஸ்லைம்உடலங்கள் (Slime body) | முதிர்ந்த சல்லடை குழாய்களில் காணப்படும் சிறப்பு வகை புரதம் |
| அடுக்கமைத்தல் (Stratification) | சில தாவர விதைகளை குளிர் நிலைக்கு உட்படுத்தி விதை உறக்கத்தை நீக்குதல். |
| துணைச் செல்கள் (Subsidiary cells) | இலைத் துளையில் காப்பு செல்களைச் சூழ்ந்து காணப்படும் செல்கள். |
| சுக்ரோஸ் (Sucrose) | குளுக்கோஸ் மற்றும் பிரக்டோஸால் ஆன குறைத்தலற்ற தன்மை கொண்ட இரட்டைச்சர்க்கரை |
| டிரைக்கோபிளாஸ்ட்கள் (Trichoblasts) | புறத்தோல் செல்களில் காணப்படும் குட்டையான செல்கள் |
| டிரைக்கோம்கள் (Trichomes) | ஒருசெல் அல்லது பலசெல் நொதிகள் |
| டூனிகாகார்பஸ்கொள்கை (Tunica–carpus theory) | டூனிகா – கார்பஸ் கோட்பாட்டின் படி தண்டு நுனி ஆக்குத்திசு டூனிகா மற்றும் கார்பஸ் என்ற இரண்டு திசுப்பகுதிகளை கொண்டது. |
| சைலோஸ் (Xylos) | கட்டை |



11th_BIO-BOTANY_CH 15-TM.indd 322 12/10/2021 10:45:43 AM